# <u>அறந்தாங்கி நகராட்சி</u>

## <u>நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

## <u>விளம்பி வருடம் மாசி மாதம் 7–ஆம் நாள் பிப்ரவரி மாதம் 19.02.2019ம் நாள் செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள அவசர கூட்டப் பொருள் விவரம்</u>

<table>
<tr>
<td><u>பொருள் எண். 1</u></td>
<td>
நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.38984/2014/பி1 நாள்.11.01.2019 உடன் இணைத்து வரப்பெற்ற 8வது மாநில உயர்மட்ட குழு கூட்ட நடவடிக்கைகளின் (Meeting Minutes) படி தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் முதற்கட்ட குப்பை சேகரத்திற்கு 16 எண்ணிக்கை பேட்டரி ஆப்பரேட்டட் வாகனம் (BOV) வாங்கிட ரூ.28.80 லட்சம், 2 எண்ணிக்கை லைட் கமர்சியல் வாகனம் (LCV) 2 க.மீ. கொள்ளளவு கொண்டது வாங்கிட ரூ.11.20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல் முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.1191/2019/பி3 நாள்.21.01.2019 ன் படி தூய்மை இந்தியா திட்டம் 8வது மாநில உயர்மட்ட குழு கூட்டம் நிதி 2018–2019ன் கீழ் மத்திய அரசு பங்கு தொகை 35 சதவீதம் மாநில அரசின் பங்குத் தொகை 55 சதவீதம் நகராட்சியின் பங்குத் தொகை 10 சதவீதம் என மான்யம் நிர்ணயம் செய்து 16 எண்ணிக்கை பேட்டரி ஆப்பரேட்டட் வாகனம் (BOV) வாங்கிட ரூ.28.80 லட்சம், 2 எண்ணிக்கை லைட் கமர்சியல் வாகனம் 2 க.மீ. கொள்ளளவு கொண்டது (LCV) வாங்கிட ரூ.11.20 லட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு<br>(ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>பேட்டரி ஆப்பரேட்டட் வாகனம் (BOV) வாங்கிட 16 எண்ணிக்கை</td><td>ரூ.28.80லட்சம்</td></tr>
<tr><td>2.</td><td>லைட் கமர்சியல் வாகனம் (LCV) 2 க.மீ. கொள்ளளவு கொண்டது – 2 எண்ணிக்கை</td><td>ரூ.11.20 லட்சம்</td></tr>
<tr><td></td><td>கூடுதல்</td><td>ரூ.40.00 லட்சம்</td></tr>
</table>
</td>
<td><u>தீர்மான எண்:–</u> 178<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி பங்குத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரது முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண். 0221/2019/இ1)

**பொருள் எண். 2**

அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு UIDSSMT Revolving Fund நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை –5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ந.க.எண்.13277/2017/குவ1 நாள்.09.07.2018ன்படி ரூ.210.00 இலட்சம் மதிப்பீட்டில் அறந்தாங்கி நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் குழாய் இணைப்பு இல்லாத வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு (5877 எண்ணிக்கை) வழங்கும் பணி செய்தல் (Providing Internal Plumbing Works for Water Supply HSC'S (5877 Nos) in Aranthangi Municipality) மேற்கொள்ள அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்ள 22.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. 14.02.2019 அன்று இரண்டாம் முறை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழிற்நுட்ப உறையினை திறந்து கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் உரிய தகுதிகளை கொண்டுள்ளதனை அடுத்து 18.02.2019 அன்று விலை விபர உறையினை திறந்து ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டுள்ளவாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | Surya Agency, Didigul | 8.01 % அதிகம் |
| 2) | Trichy Construction company, Trichy | 5.02 % அதிகம் |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Trichy Construction company, Trichy, நிறுவனம் கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (5.02 சதவீதம் அதிகம்) கொடுத்துள்ளார். மேற்படி கூடுதல் ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலைக்குள் குறைத்து தர கோரியதில் மேற்படி

**தீர்மான எண்:–** 179
**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2,3,4 அனுமதிக்கப்பட்டது

தொகையினை 4.74 சதவீதமாக குறைத்து கொள்வதாக தெரிவித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு Trichy Construction company, Trichy நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 4.74 சதவிகிதம் அதிகமாக உள்ளதனை ஏற்கலாம்.
3. மேற்படி பணி திட்டபணியாதலால் மூன்றாம் முறை ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதமாதம் ஏற்படும் ஆகையால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். மேலும் மேற்படி கூடுதல் சதவீதம் நகர்மன்ற வரம்பிற்கு உட்பட்டுள்ளதால் அதனை ஏற்கலாம்.
4. மேலும் மதிப்பீட்டை விட கூடுதலாகும் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2815/2018/இ1)

**<u>பொருள் எண். 3</u>**

அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 8வது மாநில உயர்மட்ட குழு நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல் முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.1191/2019/பி3 நாள்.21.01.2019 ன்படி ரூ.28.80 இலட்சம் மதிப்பீட்டில் பேட்டரி ஆப்பரேட்டட் வாகனம் 16 எண்ணிக்கை வாங்கிட அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வாகனம் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 15.02.2019 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | அருண் இந்தியன் மோட்டார்ஸ்,<br>5, காந்தி ரோடு, சேலம் | 0.06 % குறை |
| 2) | பிரியம் இன்டஸ்ட்ரீஸ் அன்டு இன்ஜினியரிங் பிரைவேட் லிட்.<br>எண்.625, சூரியா காம்ளக்ஸ் 2வது தளம், அண்ணா சாலை,<br>சென்னை–6 | 0.24 % குறை |

**<u>தீர்மான எண்:–</u>** 180

**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிக்கு பிரியம் இன்டஸ்ட்ரீஸ் அன்டு இன்ஜினியரிங் பிரைடே் லிட், கோயம்பத்தூர் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.24 சதவிகிதம் மிகக் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (ந.க.எண்.0221/2019/இ1) | |
| **<u>பொருள் எண். 4</u>** | அறந்தாங்கி நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 8வது மாநில உயர்மட்ட குழு நிதியின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல் முறை உத்திரவு கடிதம் ந.க.எண்.1191/2019/பி3 நாள்.21.01.2019ன்படி ரூ.11.20 இலட்சம் மதிப்பீட்டில் லைட் கமர்சியல் வாகனம் (LCV) 2 க.மீ. கொள்ளளவு கொண்டது வாங்கிட அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி வாகனம் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள 15.02.2019 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u>** 181<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | ஏ.பி.டி. இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கமர்சியல் வெகிக்கிள் டீலர், அஞ்சல் பெட்டி எண்.7, 51ஏ, பாலகாடு மெயின் ரோடு, தெற்கு உக்கடம், கோயம்பத்தூர் –1 | 0.01 % குறைவு |
| 2) | சக்தி ஆட்டோ மோட்டார்ஸ் லிமிடெட்,<br>சக்தி பைனான்ஸ் பில்டிங்,<br>டாக்டர். நஞ்சப்பா ரோடு, காந்திபுரம், கோயம்பத்தூர் | 7.14 % அதிகம் |

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு ஏ.பி.டி. இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கமர்சியல் வெகிக்கிள் டீலர், கோயம்பத்தூர் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01 சதவீதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
   (ந.க.எண்.0221/2019/இ1)

**<u>பொருள் எண். 5</u>**

அறந்தாங்கி நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம், திடக்கழிவு மேலாண்மை திட்டம், 7வது மாநில உயர்மட்ட குழு நிதி 2018–2019ன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | நாளிதழின் பெயர் | பில் எண் மற்றும் நாள் | விளம்பர செய்யப்பட்ட நாள் | தொகை |
|---|---|---|---|---|
| 01 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/1157/18-2019 dt.30.01.2019 | 30.01.2019 | 53071.00 |
| 02 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/1055/18-2019 dt.21.12.2018 | 18.12.2018 | 50450.00 |
| 03 | Accord Advertising Agencies, Chennai | DIPR/AAA/0864/18-2019 dt.07.11.2018 | 04.11.2018 | 70088.00 |
| 04 | Thina Thandhi, | | | 8681.00 |
| | | | மொத்தம் | 182290.00 |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.7043/2017/அ1)

**<u>தீர்மான எண்:–</u>** 182

**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td><u>பொருள் எண். 6</u></td>
<td>
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை புரிந்தது அடுத்து இந்நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகள் குறித்து வரவேற்பு அறிவிப்புகள் விளம்பரம் செய்த வகையில் கீழ்கண்டுள்ள விபரப்படி நாளிதழ்களுக்கு உண்டான விளம்பர கட்டணத் தொகை கீழ்கண்டுள்ளவாறு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது
<table>
<tr><th>வ.எண்</th><th>நாளிதழின் பெயர்</th><th>பில் எண் மற்றும் நாள்</th><th>விளம்பர செய்யப்பட்ட நாள்</th><th>தொகை</th></tr>
<tr><td>01</td><td>தினதந்தி</td><td>861 நாள்.20.01.2019</td><td>20.01.2019</td><td>22000.00</td></tr>
<tr><td>02</td><td>தினமலர்</td><td>556 நாள்.20.01.2019</td><td>20.01.2019</td><td>27300.00</td></tr>
<tr><td>03</td><td>தினகரன் (கால் பப்ளிகேசன்ஸ், திருச்சி)</td><td>330133248 நாள்.20.01.2019</td><td>201.01.2019</td><td>27300.00</td></tr>
<tr><td>04</td><td>புதுகை வரலாறு</td><td>1197 நாள்.20.01.2019</td><td>20.01.2019</td><td>21000.00</td></tr>
<tr><td colspan="4">மொத்தம்</td><td>97600.00</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.7043/2017/அ1)
</td>
<td><u>தீர்மான எண்:–</u> 183<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 7</u></td>
<td>இந்நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் 2011ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு 2012ம் ஆண்டு திறப்புவிழா கண்டு அலுவலம் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலக கட்டிடம் 2011ம் ஆண்டு செய்யப்பட்ட வர்ணப்பூச்சு மங்கி, பொலிவிழந்து காணப்படுகிறது, மேலும் அலுவலக கட்டிடத்தில் சுற்றுச்சுவர் மற்றும் பழுது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் வர்ணப்பூச்சு செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே அலுவலக கட்டிடத்திற்கு வெளிப்புறம் வர்ணப்பூச்சு செய்யும் பணி மேற்கொள்ளவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,00,000/– க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 184<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2,3அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் .<br>3. தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண். 0590/2019/இ1)</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண். 8</u></td><td>அறந்தாங்கி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் 16.11.2018 ம் தேதி கஜாபுயல் ஏற்பட்டு நகர் முழுவதும் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது மேலும் அதன் தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையில் நகரின் பல பகுதிகளில் உள்ள சாலைகள் மோசமடைந்த நிலையில் உள்ளது தற்பொழுது நகரில் உள்ள பிரதான சாலைகள் குண்டும் குழியுமாக உள்ளது. தற்பொழுது நகர் முழுவதும் வாகன போக்குவரத்திற்கும், பொதுமக்கள் போக்குவரத்திற்கும் இடையூறு இல்லாத வகையில் முக்கிய நகர் பகுதிகளில் உள்ள பிரதான சாலைகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பொது மக்களின் நலன் கருதியும் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களின் வேண்டுகோள் அடிப்படையில் தார் ஒட்டு (Batch Work) மூலம் சரி செய்யும் பணிக்கு நகர் மன்ற தீர்மான எண். நாள்.10.01.2019 .ல் அனுமதிக்கப்பட்டுள்ளது மேற்கண்ட பணிக்கு 07.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திருமதி.கே. தேன்மொழி<br>ஒப்பந்ததாரர்</td><td>2.24 % அதிகம்</td></tr>
<tr><td>2)</td><td>திரு.டி.மெய்ஞானம்<br>ஒப்பந்ததாரர்</td><td>0.05 % குறைவு</td></tr>
</table></td><td><u>தீர்மான எண்:–</u> 185<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td><u>அலுவலகக் குறிப்பு:—</u><br><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2 ) மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண். 00128/2019/இ1</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண். 9</u></td><td>இந்நகராட்சி பொறியியல் பிரிவு வாகனங்களுக்குண்டான செலவீனங்களுக்கு மன்றதீர்மான எண்.252 நாள். 28.03.2018ல் ரூ.10.00 லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சி குடிநீர் விநியோக வாகனம் டி.என் 55 டி 4245க்கு தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி 18.02.2019 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr><tr><td>1)</td><td>வெற்றி ஆட்டோ மொபைல்ஸ்<br>மதுரை</td><td>ரூ.78,650.00</td></tr><tr><td>2)</td><td>ஜோ இஞ்சினியரிங்<br>மதுரை</td><td>ரூ.85,550.00</td></tr><tr><td>3)</td><td>சாய் மோட்டார்ஸ்<br>மதுரை</td><td>ரூ.89,950.00</td></tr></table><br><u>அலுவலகக் குறிப்பு:—</u><br><br>1) மேற்படி பணிக்கு வெற்றி ஆட்டோ மொபைல்ஸ் மதுரை நிறுவத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 6346/2016/இ1)</td><td><u>தீர்மான எண்:—</u> 186<br><u>தீர்மானம்:—</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 10</u>** | இந்நகராட்சி பகுதிகளில் தெருவிளக்கு வசதி இல்லாத மற்றும் விரிவாக்க பகுதிகளில் தெருவிளக்கு வசதி ஏற்படுத்திதர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையினை ஏற்று தெருவிளக்கு வசதி ஏற்படுத்திதர இந்நகர்மன்றத் தீர்மான எண்.56 நாள்.11.11.2016ன் படி அனுமதி பெற்று தமிழக அரசின் மின்சிக்கனத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப்பட்டு தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தரப்பட்டது.<br>மேற்படி நடவடிக்கைகள் யாவும் தனியார் மூலம் ESSCO PPP Method தெருவிளக்கு பராமரிப்பு பணி சபரி எலெக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனம் பொறுப்புபேற்கும் முன்பு (01.01.2017க்கு முன்னர்) செய்து தரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறு நகராட்சியால் அமைக்கப்பட்ட 213 தெருவிளக்குகள் IGA அறிக்கையில் கொண்டுவரப்படாமல் விடுபட்டு விட்டது. எனவே மேற்படி நகராட்சியால் அமைக்கப்பட்ட தெருவிளக்குகள் மேற்படி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படாமல் இருந்து வந்ததை தற்பொழுது அவர்களின் பராமரிப்பு பணியில் கொண்டுவரவும், அதற்கான அறிக்கை பெற்று சபரி எலெக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனத்தின் பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி விளக்குகளுக்கு IGA அறிக்கை தனியாக பெறவும், மேற்படி தெருவிளக்குகளை பராமரிப்பு தொகையினை ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விதிகளின் படியும், ஒப்பந்த பராமரிப்பு தொகையின் அடிப்படையில் பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்:-</u>** 187<br>**<u>தீர்மானம்:-</u>** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 11</u>** | இந்நகராட்சி பகுதிகளில் கடந்த **16.11.2018** அன்று கஜா புயல் கடந்து சென்று மரங்கள் சாய்ந்தும், வேரோடு பிடிங்கியும் அருகில் உள்ள மின் கம்பங்கள், மின் கம்பிகளில் விழுந்ததால் மின்கம்பங்கள் உடைந்தும், சாய்ந்தும் பாதிப்புகள் ஏற்பட்டும் அதன் காரணமாக தெருவிளக்குள் சேதமடைந்து, மழை நீரினால் பழுதடைந்து பாதிப்பு ஏற்பட்டது. மேற்படி தெருவிளக்குகளை சீர்செய்யவும் பழுதடைந்த மற்றும் சேதமுற்ற விளக்குகளை மாற்றம் செய்யவும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின் படி 150 எல்.இ.டி. விளக்குகள் (20 வாட்ஸ் 87, 40 வாட்ஸ் –2, 60 வாட்ஸ் –1, 90 வாட்ஸ்–60 எண்ணிக்கை) ஏற்கனவே தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொண்டுவரும் சபரி எலெக்ட்ரிகல்ஸ், சென்னை நிறுவனம் சப்ளை செய்து, பொருத்தி, பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி விளக்குகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகித அடிப்படையில் பொது நிதியிலிருந்து வழங்கவும் அனுமதிக்கலாம்.<br>3. தெருவிளக்கு மற்றும் கஜா புயல் மீட்பு பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **<u>தீர்மான எண்:–</u>** 188<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 12</u>** | இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மேற்கு பள்ளி எதிரில் மாணவர்கள் விளையாட்டு திடலில் சுற்றுச்சுவர் மற்றும் நடை பாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி விளையாட்டு திடலுக்கு மாணவர்கள் விளையாட உபகரணங்கள் அமைக்கவும் அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5,00,000/– க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **<u>தீர்மான எண்:–</u>** 189<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம் .<br>3. தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண். 0580/2019/இ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 13</u></td>
<td>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு டி.எண் 55 H 9239 கழிவுநீர் அகற்றும் வாகனத்திற்க்கு 2019–2020ம் ஆண்டு தகுதிச் சான்று பெற வேண்டியுள்ளதால், மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய நிறுத்தப்பட உள்ளதால், பொது சுகாதாரம் பாதிக்கப்படாத வகையில் தனியார் கழிவு நீர் அகற்று வாகனத்தினை வாடகை அடிப்படையில் அமர்த்திடவும், அதற்கான செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>மன்ற அனுமதி எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிக்கு 05.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை நாள் ஒன்றுக்கு வாடகை ரூ</th></tr>
<tr><td>1)</td><td>திரு.ஏ.மணிகண்டன்,<br>காந்திபூங்கா ரோடு,<br>அறந்தாங்கி</td><td>ரூ.5,800.00</td></tr>
<tr><td>2)</td><td>திருமதி.ஆர்.சாரதா,<br>மணிவிளான் தெரு,<br>அறந்தாங்கி</td><td>ரூ.5,400.00</td></tr>
</table></td>
<td><u>தீர்மான எண்:–</u> 190<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு:–</u><br><br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கு திருமதி.ஆர்.சாரதா, அறந்தாங்கி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதனை மன்றம் ஏற்கலாம்.<br>3) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 00145/2019/எச்1) | |
| <u>**பொருள் எண். 14**</u> | அறந்தாங்கி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு விதிகள் –2016 ன் படி 27 வார்டு பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் மட்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரித்து வாங்கி மேற்படி மட்கும் குப்பையில் இருந்து இயற்க்கை உரம் தயாரிக்க பட உள்ளது மேலும் அறந்தாங்கி நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட 100 துப்புரவு பணியாளர்களின் இறப்பு மற்றும் ஒய்வு பெற்ற நிலையில் 70 பணியாளர்கள் மட்டுமே உள்ளார்கள் மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் உத்திரவின் படி 76 நபர்கள் தனியார் மயம் செய்யப்பட்டு 70 மற்றும் 76 மொத்தம் –146 பணியாளர்கள் மட்டுமே வீடுவீடாக குப்பை வாங்கும் பணி கலவை உரம் தயார்செய்யும் பணி செய்து வருகிறார்கள். மேலும் தூய்மை இந்தியா திட்ட பணியாளர்கள் மூலம் 2018ல் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதில் மொத்தமுள்ள வீடுகள் 12246 என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படி இந்நகராட்சியில் தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் விபரம்<br>1. 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் வீதம் 12246 **X** 3 – 147 பேர்<br>2. டிப்பர் லாரி 2 க்கு தலா 3பேர் வீதம் 2 **X** 3 – 6 நபர்கள்<br>3. டம்பர் பிளேசர் லாரி 2 க்கு தலா 1பேர் வீதம் 2 **X** 3 – 2 நபர்கள்<br>4. கலவை உரக்கிடங்கிற்க்கு நாள்தோறும் 20 டன் வரை – 2 நபர்கள்<br>5. பேருந்து நிலைய இலவச கழிப்பறைக்கு 1 ஆண்+1பெண் – 2 நபர்கள்<br>6. பேருந்து நிலைய வளாக துப்புரவு பணிக்கு – 2 நபர்கள்<br>7. கழிவு நீர் ஊர்திக்கு – 2 நபர்கள் | <u>**தீர்மான எண்:–**</u> 191<br><u>**தீர்மானம்:–**</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

8. டிராக்டர் வாகனத்திற்கு – 3 நபர்கள்
9. சிறிய லாரி 2 க்கு தலா 3பேர் வீதம் 2 X 3 – 6 நபர்கள்

மொத்தம் – 172 நபர்கள்

இவைகளில் இந்நகராட்சியில் பணிப்புரியும் துப்புரவு பணியாளர்களின் தற்போதைய நிலை

1. அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் –100 நபர்கள்
2. 01.02.2019 அன்று துப்புரவு பணியாளர்கள் – 70 நபர்கள்
3. தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் –76 நபர்கள்

மொத்த பணியாளர்கள்–146 நபர்கள்

துப்புரவு பணியாளர்கள் தேவை விவரம் .

1. கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் (172–146) –26 நபர்கள்

கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியம்.

| | |
|---|---|
| தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் 26 X 241 X365 | – 2287090 |
| தொழிலாளர் சேமநல நிதி 25.61 % | – 585723 |
| காப்பீட்டு தொகை ரூ 1500 நபர் 1 க்கு | – 39000 |
| சீருடை ரூ 2000 நபர் 1 க்கு | – 52000 |
| பாதுகாப்பு உபகரணங்கள் ரூ 2000 நபர் 1 க்கு | – 52000 |
| கூடுதல் | – 3015813 |
| நிர்வாக செலவினம் –10 % | – 301581 |
| மொத்தம் | – 3317394 |

ஆகவே கூடுதலாக தேவைப்படும் 26 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து துப்புரவு பணிகள் மேற்கொள்ள இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.33,17,394.00 (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்தி பதினேழாயிரத்து முன்நூற்று தொன்நூற்றி

| | | |
|---|---|---|
| | நான்கு மட்டும்) பொது நிதியில் மேற்கொள்ளவும் இப்பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி நிர்வாக அனுமதி பெற்று இப்பணிகளை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |

**ஓம்/—நை.மீரா அலி**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**

# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## விளம்பி வருடம் மாசி மாதம் 16—ஆம் நாள் பிப்ரவரி மாதம் 28.02.2019ம் நாள் வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதரணக் கூட்டப் பொருள் விபரம்

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர்(பொ) அவர்களின் ஜனவரி—2019ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:—**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:—** 192<br>**தீர்மானம்:—** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | இந்நகராட்சி வரவு செலவு திட்டம் 2018—2019 திருத்திய வரவு செலவு மற்றும் 2019—2020 உத்தேச வரவு செலவிற்கும் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:—**<br>மன்றம் அனுதிக்கலாம் | **தீர்மான எண்:—** 193<br>**தீர்மானம்:—** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td><u>பொருள் எண். 3</u></td>
<td>அறந்தாங்கி நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் 2011ம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு 2012ம் ஆண்டு திறப்புவிழா கண்டு அலுவலம் இயங்கி வருகிறது. மேற்படி அலுவலக கட்டிடம் 2011ம் ஆண்டு செய்யப்பட்ட வர்ணப்பூச்சு மங்கி பொலிவிழந்து காணப்படுகிறது, மேலும் அலுவலக கட்டிடத்தில் சுற்றுச்சுவர் மற்றும் பழுது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் வர்ணப்பூச்சு செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே அலுவலக கட்டிடத்திற்கு வெளிப்புறம் வர்ணப்பூச்சு செய்யும் பணி மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண். நாள். 19.02.2019.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது மேற்கண்ட பணிக்கு 26.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1)</td><td>திரு.எஸ். ரமேஷ், ஒப்பந்ததாரர்</td><td>0.07 % குறைவு</td></tr>
<tr><td>2)</td><td>திரு.டி.மெய்ஞானம், ஒப்பந்ததாரர்</td><td>2.12 % அதிகம்</td></tr>
</table>
<br><u>அலுவலகக் குறிப்பு:–</u><br><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்<br>
2) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். ரமேஷ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்<br>
(ந.க.எண். 0590/2019/இ1)</td>
<td><u>தீர்மான எண்:–</u> 194<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td><u>பொருள் எண். 4</u></td>
<td>இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் மேற்கு பள்ளி எதிரில் மாணவர்கள் விளையாட்டு திடலில் சுற்றுச்சுவர் மற்றும் நடை பாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. மேற்படி விளையாட்டு திடலுக்கு மாணவர்கள் விளையாட உபகரணங்கள் அமைக்க இந்நகர் மன்ற தீர்மான எண். நாள். 19.02.2019.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது மேற்கண்ட பணிக்கு 26.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.</td>
<td><u>தீர்மான எண்:–</u> 195<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | திருமதி.கே.தேன்மொழி, ஒப்பந்ததாரர் | 0.05 % குறைவு |
| 2) | திரு.டி. மெய்ஞானம், ஒப்பந்ததாரர் | 1.82 % அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:—</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.கே.தேன்மொழி, ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்

(ந.க.எண். 0508/2019/இ1)

**<u>பொருள் எண். 5</u>**

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு—15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகவரி | விபரம் | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | ராயல் எலெக்ட்ரிகல்ஸ், அறந்தாங்கி | இந்நகராட்சி பகுதியில் கஜா புயல் தாக்கியதன் விழைவாக குடிநீர் பராமரிப்பு பணிகள் பழுதடைந்த மின் இணைப்புகள் மினி பவர் பம்ப், பொது மக்ககள் பயன்பாட்டிற்கு கொண்டு வர மின் சாதன பொருட்கள் சப்ளை செய்த வகையில் | 131070.00 |
| 2 | திரு. ஏ.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் | கஜா புயல் பாதிப்பு சாலைகள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் குவாரி டஸ்ட் மற்றும் WMM mix சப்ளை செய்து பரத்தும் பணி மேற்கொண்ட வகையில் | 341250.00 |

**<u>தீர்மான எண்:—</u>** 196
**<u>தீர்மானம்:—</u>** பதிவு செய்யப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| 3. | தனது (திரு.தேவராஜ், வருவாய் ஆய்வாளர்) | 2018–2019 சொத்துவரி மற்றும் இதர வரியினங்கள் செலுத்திடவும் மற்றும் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பரம் செய்தது | 7500.00 |
| 4 | எம். சிவசங்கர், சிவா எலெக்ட்ரிகல்ஸ் | வரி விளம்பரம் செய்ய புதிய ஆம்பிளிபேர், மைக் செட் மற்றும் பென்டிரைவ் வாங்கி பொருத்திய வகையில் | 8750.00 |
| 5 | திரு. எம்.செல்லமுத்து, மின் கம்பியாளர் (தனது) | நாடிமுத்து நீரேற்று நிலையம் பம்ப் ரூம் எலெக்ட்ரிகல்ஸ் ஸ்டார்டர் பழுது நீக்கம் செய்த வகையில் | 4900.00 |
| 6 | திரு. எம்.செல்லமுத்து, மின் கம்பியாளர் (தனது) | பெரியார் நீரேற்று நிலையம் சப்ளை வால்வு பழுது நீக்கம் செய்த வகையில் | 2650.00 |
| 7 | கிருஷ்ணா எலெக்ட்ரிகல்ஸ், அறந்தாங்கி | அவுலியா நகர் பொது கழிப்பிடம் பம்ப் ரூம் பராமரிப்புக்குத் தேவையான மின் சாதனம் பொருட்கள் சப்ளை செய்த வகையில் உண்டான செலவினம் | 9725.00 |

**அலுவலகக்குறிப்பு:–**

பதிவு செய்யலாம்

**ஓம்/–நை,மீரா அலி**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**